**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 07-ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 குரோதி வருடம் ஆனி திங்கள் 23-ம் நாள்**

**S.T.C. No. 505/2023**
(குற்ற எண்.188/2023, தேவகோட்டை நகர் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
தேவகோட்டைநகர் காவல்நிலையம்,
குற்ற எண்.188/2023.

....குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.காவேரி (55/2023)
க/பெ. சமயதுரை

.....எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின்சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>தேவகோட்டை நகர் காவல்நிலையம்,<br>குற்ற எண்.188/2023. |
| 2. | எதிரிகள் | 1.காவேரி (55/2023)<br>க/பெ. சமயதுரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **<u>முகவரி:</u>**<br>வீரபாண்டியபுரம், தேவகோட்டை. | | |
| 3. | குற்றச்சாட்டுகள் | எதிரி மீது பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. | | |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 12/08/2023 | | |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 12/08/2023 | | |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 12/08/2023<br>12/08/2023 Bailed by Police | முன்பிணை பெற்ற நாள்:இல்லை | |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 24/08/2023 | | |
| 8. | கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 17/04/2026 | | |
| 9. | கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | ----- | | |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 12/05/2026 | 12/05/2026 |
| | | அ.சா.2 | 20/05/2026 | 20/05/2026 |
| | | அ.சா.3 | 02/06/2026 | 02/06/2026 |

| | | | |
|---|---|---|---|
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b)ன் கீழ் வினவிய நாள் | 05/06/2026 | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் |
| | | ------ | ----- |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 17/04/2026 | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 19/06/2026 | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 07/07/2026 | |
| 16. | தீர்வு | **முடிவாக, எதிரி பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 278(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** | |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.லாரன்ஸ், அவர்கள்

முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 12.08.2023 ம் தேதி காலை 09.00 மணிக்கு தேவகோட்டை வீரபாண்டியபுரத்தில் உள்ள தனது வீட்டின் முன்பு எதிரி எவ்வித அரசு அனுமதியின்றி சுயலாப நோக்கம் கருதி அரசு முத்திரையுடன் கூடிய சுமார் 180 ml அளவு பிடிக்கக்கூடிய Black Pearl Brandy-03 மதுபான பாட்டில்களை சாக்குப் பையில் மறைத்து விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ 7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 சிலம்பரசன் தனது சாட்சியத்தில் தான் தற்போது காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 12.08.2023 ம் தேதி அன்று தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்தபோது காலை 9 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.அன்சாரி உசேன் மற்றும் இரண்டாம் நிலைக்காவலர் ராதாரவி ஆகியோர்கள் சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அரசு ரோந்திற்கு சென்றபோது தேவகோட்டை மருத்துவமனைக்கு எதிர்புறம் சட்டத்திற்கு விரோதமாக மதுவிற்பனை நடப்பதாக தகவல் கிடைத்ததால் அங்கு சென்று சோதனை செய்தோம் என்றும் அப்போது அந்த இடத்தில் பின்னர் விசாரித்து பெயர் தெரிந்துகொண்ட காவேரி என்ற பெண் ஒரு பையில் வைத்து மதுபாட்டில்களை விற்று கொண்டிருந்தார் ஆஜர் எதிரிதான் மேற்படி காவேரி ஆவார் பையை வாங்கி சோதனை செய்தபோது 3 மதுபாட்டில்கள் இருந்தது எதிரியை சார்பு, ஆய்வாளர் விசாரிக்கையில் அவர் தான் தெரியாமல் செய்துவிட்டதாக குற்றத்தை ஒப்புக்கொண்டார் தனிநபர்கள் யாரும் சாட்சியாக முன்வராத காரணத்தால் எங்களை சாட்சியாக வைத்து சார்பு ஆய்வாளர் மதுபாட்டில்களை எங்கள் முன்னிலையில் அத்தாட்சி

மகஜரில் கைப்பற்றினார் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் (மேற்படி அத்தாட்சி மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் கைப்பற்றிய மதுபாட்டில்களுடன் எதிரியை நிலையம் அழைத்து வந்து சார்பு ஆய்வாளர் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார் என்றும் பின்னர் கைப்பற்றிய மது பாட்டில்களை நிலையம் பின்புறம் வைத்து சார்பு ஆய்வாளர் தங்கள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயாரித்து கொட்டி அழிக்கப்பட்டது என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் (மேற்படி அழித்தல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 ராதாரவி தனது சாட்சியத்தில் தான் தற்போது சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 12.008.2023 ம் தேதி காலை 9 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.அன்சாரி உசேன் மற்றும் முதல் நிலைக்காவலர் சிலம்பரசன் ஆகியோர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது வீடிபாண்டியபுரம் அருகே ஒரு பெண் நபர் ஒரு சாக்குப்பையுடன் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்றுகொண்டிருந்தவர் தங்களைப் பார்த்ததும் ஒடி முயற்சித்தவரை மடக்கி பிடித்து சார்பு ஆய்வாளர் விசாரணை செய்ய அவரிடம் இருந்த சாக்குப்பையில் 180 ml அளவுள்ள black pearl 3 பாட்டில்கள் இருந்தது என்றும் மேற்படி நபர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை என்றும் அவரை சார்பு ஆய்வாளர் விசாரிக்க அவர் ஆதாயம் கருதி விற்பனைக்கூ வைத்திருந்ததாக குறிப்பிட்டார் என்றும் சார்பு ஆய்வாளர் அவரிடம் இருந்த

மதுபாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் (மேற்படி அத்தாட்சி மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் எதிரியையும் மதுபாட்டில்களையும் காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தார் என்றும் பின்னர் அன்றைய தினம் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை காவல் நிலையம் பின்புறம் வைத்து அழித்தல் மகஜர் தயார் செய்து அழித்தார் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் (மேற்படி அழித்தல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 ஸ்டாலின் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு. அன்சாரி உசேன் கடந்த 12/08/2023 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு அ.சா.1,2 ஆகியோருடன் சேர்ந்து மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றது குறித்தும், எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றியது குறித்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும் பின்னர் கைப்பற்றிய மதுபாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து அழித்தது குறித்தும் குற்ற இறுதியறிக்கை தயார் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்து அத்தாட்சி மகஜரை அ.சா.ஆ.5 ஆகவும், முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.6 ஆகவும், அழித்தல் மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் கைப்பற்றுதலுக்கான சாட்சிகளான அ.சா.1, 2 ஆகியோர் அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தும் விதமாக சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையில் தனிநபர் யாரும் முன் வராததால் அ.சா.1,2 ஆகியோரை சாட்சியாக வைத்து அத்தாட்சி தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்தில் இருந்து சம்பவ இடமானது தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு எதிர்ப்புறம் என்பது தெரிய வருகிறது. அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாங்கள் ரோந்து சென்ற சமயம் தேவகோட்டை அரசு மருத்துவமனை அருகே மக்கள் கூட்டம் இருக்கும் என்றும் சார்பு ஆய்வாளர் பொதுமக்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும்

சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்குப்படி தனி நபர்கள் யாரும் முன் வராததாக சொல்லப்படும் நிலையில் அ.சா.1 ன்றோ சார்பாய்வாளர் பொதுமக்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ளபடி பொதுமக்கள் யாரும் முன் வரவில்லை எனில் அவ்வாறு யார் யாரை விசாரித்து அவர்கள் முன்வரவில்லை என்பது போன்ற எந்த விளக்கமும் அரசு தரப்பு வழக்கில் இல்லை. அ.சா.1, 2 ஆகியோர் காவல் துறை சாட்சிகள் என்ற காரணத்திற்காக மட்டுமே அவர்களுடைய சாட்சியத்தை சந்தேகிக்க இயலாது என்ற போதிலும் சம்பவ இடமானது தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ள நிலையில் தனிநபர் சாட்சி ஒருவர் கூட கிடைக்கவில்லை என்று அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள வழக்கானது நம்பத் தகுந்ததாக இல்லை.

(8.2) மேலும் இவ்வழக்கில் அ.சா.ஆ.5 அத்தாட்சி மகஜர் படி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் 3 மது பாட்டில்களும் அ.சா.ஆ.7 அழித்தல் மகஜர் படி கொட்டி அழிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பாட்டில்களில் உள்ளவை மதுபானம் தான் என்பதை நிரூபிக்க அவற்றை தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்த விசாரணை அதிகாரியால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரியவருகிறது.

(8.3) மேலும் எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் மது பானங்களின் மொத்த அளவு 540ml மட்டுமே உள்ள நிலையில் அவற்றை எதிரி விற்பனைக்காக தான் வைத்திருந்தார் என்பதை நிரூபிக்கும் விதமாக இவ்வழக்கில் எதிரிடமிருந்து மது வாங்கியதாக எந்த நபரும் விசாரிக்கப்படவில்லை. அதேபோல் விற்பனை செய்த பணம் என்று எந்த பணமும் கைப்பற்றப்படவும் இல்லை. எனவே மேற்கண்ட காரணங்களையும், முரண்பாடுகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில்கொள்கையில் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே எதிரி சந்தேகத்தின் பலனைப் பெற தகுதியுடையவர் ஆகிறார்.

**9. முடிவாக, எதிரி பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 278(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 07-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA

Digitally signed by POORNIMA
Date: 2026.07.07 19:03:29 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | சிலம்பரசன் | அ.சா.1 | கைப்பற்றுதலுக்கான சாட்சிகள் |
| 2. | ராதாரவி | அ.சா.2 | கைப்பற்றுதலுக்கான சாட்சிகள் |
| 3. | ஸ்டாலின் | அ.சா.3 | தற்போதைய விசாரணை அதிகாரி |

## Judicial Form No. 68

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| S.No of the exhibit | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | அத்தாட்சி மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து | 12/05/2026 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | அழித்தல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து | 12/05/2026 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | அத்தாட்சி மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து | 20/05/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | அழித்தல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து | 20/05/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | அத்தாட்சி மகஜர் | 02/06/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | முதல் தகவல் அறிக்கை | 02/06/2026 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |
| 7. | அழித்தல் மகஜர் | 02/06/2026 | அ.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.07.07 19:03:36 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>பின்குறிப்பு:-</u>**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.